மன்னிப்பின் மாண்பு

(செய்தி சகோ.அகஸ்டின் ஜெபக்குமார்)

பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 18: 18-22

இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார். மாற்கு 11: 22-26

தேவை ஒவ்வொரு மனிதனுக்கும் வித்தியாசமானது, படிக்கிற மாணவன் நான் நன்றாக படிக்கவேண்டும் என்று நினைப்பான். வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் நான் அதில் வளரவேண்டும் என்று விருப்பப்படுவார்கள். திருமணத்திற்குக் காத்திருப்போர், நேர்த்தியான இடங்களில் தனக்கு பங்கு கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இருப்பார்கள். வாக்குத்தத்தங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் வித்தியாசப்படுகிறது. எனினும் எல்லாருடைய இதயத்திலும் ஓங்கி நிற்பது ‘தேவனிடத்தில் தாங்கள் கேட்டுக்கொள்ளப்போகிற காரியத்தை தேவன் தங்களுக்குச் செய்யவேண்டும்’ என்பதே. இந்த மனநிலையில் இருக்கும் நாம் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கின்ற மூன்று காரியங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும். நாம் கட்டுகிறவைகளெல்லாம் கட்டப்பட்டிருக்கவும், நாம் கட்டவிழ்ப்பவைகளெல்லாம் கட்டவிழ்க்கப்பட்டிருக்கவும், நாம் கேட்டுக்கொள்பவைகளையெல்லாம் பெற்றுக்கொள்ளவும் முக்கியமான மூன்று காரியங்களை தேவன் இந்த வசனங்களில் காண்பிக்கிறார். **முதலாவது மன்னிப்பு, இரண்டாவது ஒருமனம், மூன்றாவது விசுவாசம்.** இந்த மூன்றும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு, சங்கிலியைப்போல கோர்க்கப்பட்டிருக்கின்றன. எந்த இடத்திலெல்லாம் தேவன் பெற்றுக்கொள்ளத்தக்கதான, வெற்றிகரமான ஜெபத்தைக் குறித்து சொல்லுகின்றாரோ அங்கே மன்னிப்பையும் தேவன் இணைத்தே பேசுகின்றார். எனவேதான்

கர்த்தருடைய ஜெபத்திலும் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்று ஜெபிக்கும் முன்னதாக, எங்களுக்கு விரோதமாய் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிப்பதுபோல என்று இணைத்தே அவர் சொல்லிக்கொடுக்கின்றார். நம்முடைய ஜெபங்களின் மூலமாக தேவைகளையும், பிரச்சனைகளுக்கான தீர்வுகளையும் நாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புவோமாகில் நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டியது மன்னிப்பு, இரண்டாவது ஒருமனம், மூன்றாவது விசுவாசம்.

நம்மை நாம் மன்னிக்கவேண்டும்

நாம் நம்மையே மன்னிக்க அறியாமலிருப்பதினால், நம்முடைய ஜெப வாழ்க்கையில் தொய்வு விழுந்துவிடுகின்றது. நம்முடைய தேவைகளுக்காக ஆண்டவரை நாம் நாடி வரும்போது, நம்முடைய மனதில் 'நீ இதில் சறுக்கி விழுந்தவன்தானே, இந்த பாவத்தைச் செய்தவன்தானே நீ ஜெபித்து உனது ஜெபத்தை அவர் செய்வாரா' என்ற மற்றொரு சத்தம் ஒலிக்கத்தொடங்குகின்றது. **இதற்குக் காரணம் நாம் நம்மை மன்னிக்காமல் இருப்பதே.** என்னை தேவன் மன்னிப்பாரா என்ற சந்தேகத்தினால் நமது இருதயம் நம்மைக் குற்றவாளிகாகத் தீர்ப்பதினால் சந்தேகத்துடனேயே நாம் ஜெபிக்கின்றோம்.

நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து,அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேணடிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். *1யோ 3:20-22* நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்காதிருந்தால்தான் நாம் தேவனிடத்தில் அவரது பிள்ளைகள் என்ற உரிமையில் தைரியமாகச் சேரமுடியும். நம் இதயமே நம்மைக் குற்றவாளியாகத் தீர்த்துக்கொண்டிருந்தால் இந்த தைரியம் போய்விடுகின்றது. நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருக்குமானால் நாம் வேண்டிக்கொள்வதை அவராலே பெற்றுக்கொள்ளமுடியும். தேவன் நம்மை மன்னித்திருந்தபோதும் நமது குற்றவுணர்வு நம்மையே நாம் மன்னிக்கமுடியாதபடி தைரியத்தோடு கூட அவரண்டையில் சேர முடியாதபடி, ஜெபிக்க முடியாதபடி நம்மைத் தடுத்துவிடுகின்றது. அத்துடன், என் ஜெபத்தை தேவன் கேட்பாரா என்ற சந்தேகம் எழும்புகின்றது. **அப்பொழுது, அவனைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்.** மத்தேயு 27: 3-5

யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தபோது, அவர் அவர்களிடமிருந்து மறைந்துவிடுவார் என்ற எண்ணமுடையவனாயிருந்தான். மனுஷகுமாரன் புறஜாதிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார், அவர்கள் அவரை சிலுவையில் அறைந்து கொலை செய்வார்கள் மூன்றாம் நாளில் அவர் உயிரோடு எழும்புவார் என்று இயேசு அநேகமுறை சொல்லியிருந்தபோதிலும், அவன் உணர்வற்றவனாய் அதை மறந்துவிட்டு இயேசுவைக் காட்டிக்கொடுத்துவிட்டான். இயேசுவின்மேல் சுமத்தப்பட்ட சிலுவையையும், முட்கிரீடத்தையும், அடிக்கப்பட்ட முதுகையும், இரத்தத்தினால் நனைந்திருக்கின்ற அவரது அங்கியையும், தாடை மயிரை அவர்கள் பிய்க்கின்றதையும், அவரது முகத்தில் அவர்கள் துப்புகின்றதையும் அவன் பார்த்தபோது, அவன் மனஸ்தாபப்பட்டு குற்றமில்லாதவரை

நான் காட்டிக்கொடுத்துவிட்டேனே என்று அலறுகின்றான். அந்த பாவத்திற்காகத் தான் பெற்ற கூலியையும் அவன் தூக்கி எறிந்துவிட்டான். ஆசாரியனிடத்தில் சென்று 'நான் தவறு செய்துவிட்டேன்' என்று சொல்லுகின்றான். அவர்களோ 'அது உன்பாடு' என்று சொல்லிவிட்டனர். சொல்லவேண்டியவரிடத்தில் அவன் சொல்லாமல் சொல்லக்கூடாத இடத்தில் அவன் சொன்னான். அவன் உணர்த்தப்பட்டது, மனஸ்தாப்பட்டது, பணத்தைத் தூக்கி எறிந்தது எல்லாம் சரிதான், ஆனால், அவனையே அவனால் மன்னிக்கமுடியவில்லை எனவே அவன் நான்றுகொண்டு செத்தான்.

நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! எபிரேயர் 9:14

யாரெல்லாமோ ஜெபிக்கிறார்கள் அவர்களுக்கு உத்தரவு கிடைக்கின்றது, எனக்கு உத்தரவு கிடைக்கவில்லையே, தேவனிடத்தில் செல்லவும் எனக்கு தைரியமில்லையே என்று அங்கலாய்க்கும் ஒவ்வொருவரையும் பார்த்து தேவன் சொல்லும் வார்த்தை இதுவே. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது பாவத்தை நீக்குவது மாத்திரமல்ல, குற்றப்படுத்துகின்ற நம்முடைய மனசாட்சியையும் சுத்திகரிப்பதற்கு வல்லமையுடைதாயிருக்கின்றது. தேவன் நம்மை மன்னிப்பதோடு மாத்திரமல்ல, நம்முடைய மனசாட்சியையும் சுத்திகரித்து நம்மை நீதிமானாக மாற்றியிருக்கின்றார்.

தேவன் மன்னித்தவர்களை நாமும் மன்னிக்கவேண்டும்

அந்நாட்களில் அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை தேவனுடைய வாக்கைப் போலிருந்தது. அப்படியே அகித்தோப்பேலின் ஆலோசனையெல்லாம் தாவீதுக்கும் இருந்தது. அப்சலோமுக்கும் அப்படியே இருந்தது. 2 சாமு 16:23

அகித்தோப்பேல் தன் யோசனையின்படி நடக்கவில்லை என்று கண்டபோது, தன் கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறி, தன் ஊரில் இருக்கிற தன் வீட்டுக்குப்போய், தன் வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்தி, நான்றுகொண்டு செத்தான். அவன் தகப்பன் கல்லறையில் அவனை அடக்கம் பண்ணினார்கள். 2 சாமு 17:23

அகித்தோப்பேல் தாவீதின் மந்திரிகளிலேயே பிரதானமானவன். அவனுடைய வாக்கு தேவ வாக்கைப்போலவே இருந்தது. அவனது வார்த்தையை தாவீதும் அவனது குமாரனாகிய அப்சலோமும் தேவனது வார்த்தையாகவே ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அகிக்தோப்பேல் பத்சேபாளுக்கு தாத்தா உறவு. உரியாவின் மனைவியாயிருந்த அவளை தாவீது பார்த்து, அவளை கெடுத்துப்போட்டபின்பு, பத்சேபாள் தாவீதுக்கு தான் கர்ப்பவதி என்று செய்தியனுப்புகிறாள். தாவீதோ உரியாவை போர்க்களத்திலிருந்து வரவழைத்து அவனுக்குக் குடிக்கக் கொடுத்தும் உரியா வீட்டிற்குச் செல்ல மனதில்லாதிருந்தபோது, தாவீது உரியாவின் கையிலேயே போர்க்களத்தின் முன்னணியிலே அவனை நிறுத்தி அவனை கொலையும் செய்தான். இரண்டு ஆண்டுகள் தாவீதின் மனதிலே போராட்டம் காணப்பட்டபோதிலும், தேவனிடத்தில் வரக்கூடாதவனாயிருந்த தாவீதுக்கு நாத்தான் என்னும் தீர்க்கதரிசியை அனுப்பினார். அதை உணர்ந்த தாவீது 'உமது கிருபையினால் எனக்கு இரங்கும், ஈசோப்பினால் என்னை சுத்திகரியும், உமது சமூகத்தை விட்டு என்னை தள்ளிவிடாதேயும், பரிசுத்த ஆவியை என்னைவிட்டு எடுத்துப்போடாதேயும்' என்று

வேண்டினான். நொறுங்குண்ட மனதாயிருந்த அவனை தேவன் மன்னித்தார் எனினும் சத்துருக்கள் தூஷிப்பதற்கு அது ஏதுவாயிருந்தபடியினால், பிறந்த குழந்தையையும் தேவன் அடித்தார். தாவீதுக்கு அபிகாயில், அபிஷா, மீகா என்ற மனைவிகள் இருந்தபோதும், மாற்றானின் மனைவியாயிருந்த பத்தேபாளோடு அவன் தவறு செய்தது மாத்திரமல்லாமல் அவளது கணவனையும் கொன்ற குற்றம் தன்மேல் இருப்பதை உணர்ந்த தாவீது பத்சேபாளிடத்தில் 'நான் உனக்கு துரோகம் செய்துவிட்டேன், உனது முதலாவது கணவனை கொலை செய்வதற்குக் காரணமாயிருந்துவிட்டேன், எனவே உனக்குப் பிறக்கப்போகிற குழந்தைதான் எனக்குப் பின்பு ராஜாவாக இருப்பான்' என்று ஆணையிட்டுக்கொடுத்தான்.

ஆனால், அகித்தோப்பேலிற்கோ இது விசனமாயிருந்தது. தாவீதை எப்படியாகிலும் கொன்றுவிடவேண்டும் என்றே அவன் நினைத்துக்கொண்டிருந்தான். **தேவன் தாவீதை மன்னித்திருந்தபோதிலும், அகித்தோப்பேல் அவனை மன்னிக்கவில்லை.** எனவே அகித்தோப்பேல் அப்சலோமின் பக்கம் சாய்ந்து தாவீதை கொல்ல திட்டம் தீட்டினான் இந்த திட்டத்தை தேவன் அவமாக்கிப்போட்டதினாலேயே அவன் நான்றுகொண்டு செத்தான். தேவன் மன்னித்திருக்கும் மனிதர்களின் பாவத்தை மன்னிக்கவும், மறக்கவும் தவறும் மனிதர்களின் நிலை இதுவே. தனது பேத்தியின் வயிற்றில் பிறக்கப்போகின்ற பிள்ளை சாலமோன் என்ற பெயரோடு கூட உலகத்தில் இல்லாத ஞானத்தையும், ஐசுவரியத்தையும் பெற்றுக்கொள்ளப்போகின்ற ராஜாவாகப்போகின்றான் என்று அகித்தோப்பேல் நினைத்திருந்தானானால் அவனுக்கு இந்த நிலை நேரிட்டிருக்காது. கிரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரண்டு மகன்களும் எரிக்கப்பட்டபோது, அவரது துணைவியார் நிருபர்களைப் பார்த்து 'என் ஆண்டவர் எனக்கு எல்லாவற்றையும் மன்னித்திருக்கிறது போல, நானும் அவர்களை மன்னிக்கிறேன்' என்றே சொன்னார்.

யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலகமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவிரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள். அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான். எபி 12:14-17

நாம் ஆசீர்வாதத்தைத் தேடியும் அதை பெற்றுக்கொள்ளாமல் போக வாய்ப்பு உண்டு. தேவன் மன்னித்தவர்களை நாம் மன்னிக்காவிட்டால் நாமும் அகித்தோப்பேலைப் போன்றவர்களே.

நாம் ஒருமனமாயிருந்தால் உலகம் ஆசீர்வதிக்கப்படும்

> **ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறாததைக் கண்டு, தன் சகோதரியின்மேல் பொறாமைகொண்டு, யாக்கோபை நோக்கி: எனக்குப் பிள்ளைகொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். அப்பொழுது யாக்கோபு ராகேலின்மேல் கோபங்கொண்டு: தேவனல்லோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், நான் தேவனா? என்றான்.** ஆதி 30:1-2

ஏழு வருடம் ஏழு நாளாய் தெரிந்திருக்கும் என்றால் யாக்கோபு ராகேலை எவ்வளது அதிகமாய் நேசித்திருப்பான். பதினான்கு வருடம் ஆடுகளை மேய்த்து ராகேலை பெற்றுக்கொண்ட யாக்கோபுக்கும் ராகேலுக்கும் இடையில் நடந்த வாக்குவாதமே மேற்கண்ட வசனம். ஒருவேளை யாக்கோபு வீட்டில் குடும்ப ஜெபம் நடந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? ஒருமனம் அங்கே எப்படி காணப்படும்? இரண்டு பேர் ஒருமனப்பட்டால் மலையும் அசையும் என்றே வேதம் சொல்லுகின்றது. ராகேல் எப்போதும் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பவளாக இருந்தாள்; அத்துடன் கணவனும் சரியில்லை என்றே நினைத்துக்கொண்டிருந்தாள். ராகேல் தேவனை மாத்திரம் நோக்கிப்பார்த்திருந்தால், எகிப்திற்கு அதிபதியாகிய யோசேப்பை பெறப்போகிறேன் என்று நினைத்திருந்தால் அவள் ஒருமனதுடன் இருந்திருப்பாள். தேவன் அவளுக்கென்று வைத்திருப்பவைகளை பார்க்கமுடியாதபடி ராகேலின் கண்கள் காணப்பட்டபடியினாலேயே அங்கே ஒற்றுமை காணப்படவில்லை. **தேவன் நமக்கு வைத்திருக்கின்ற ஆசீர்வாதங்களை நாம் காணமுடியாமல், மற்றவர்களுக்கு இருக்கின்ற ஆசீர்வாதங்களைப் பார்த்து பொறாமையுடைவர்களாய் நாம் வாழ்ந்தால் நாம் தேவனை துதிக்கவோ, ஒருமனமாய் வாழவோ இயலாது.** நமக்கென்று தேவன் வைத்திருக்கின்ற ஆசீர்வாதங்களையும், உன்னத நிலைகளையும் நாம் நோக்கிப்பார்க்கவேண்டும்.

நாம் நமக்கு நமக்கு ஆசீர்வாதங்களைக் கேட்குமுன்னதாக, தேவன் நம்மைக்கொண்டு உலகத்திற்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களின் மேல் எண்ணமுடையவர்களாய் நாம் காணப்படவேண்டும். ***‘உன்னிலிருந்து புறப்படுகிறவர்கள் பாழாய்ப் போனவைகளைக் கட்டுவார்கள்’*** என்று அநேகங்களுக்கு நம்மை ஆசீர்வாதமாக மாற்றவே தேவன் விரும்புகின்றார். ராகேலுக்கு தேவன் அருளிய யோசேப்பின் மூலம் அநேகருக்கு ஜீவரட்சனை உண்டானதுபோல, நம்முடைய சபைகளிலிருந்தும், குடும்பங்களிலிருந்தும் புறப்படும் மக்கள் அநேக ஆயிரங்களுக்கு சிலுவையின் அன்பை எடுத்துச் சொல்லுகிறவர்களாக புறப்படவேண்டும். இதை நாம் எண்ணுவோமென்றால் நம்மிலே ஒருமனது உண்டாகிவிடும், நமது விசுவாசத்துடனும், ஒருமனதுடனும் கூடிய ஜெபத்தின் மூலம் தேவன் இத்தேசத்தில் பெரிய காரியங்களைச் செய்யமுடியும்.

(அடுத்த இதழில் தொடரும்)